# சகோதரராய் வாழ்வோம்

(சிறுவருக்கான கருத்துப் பாடல்கள்)



ச. அருளானந்தம்

மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRARY

599082

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகோதரராய் வாழ்வோம்

(சிறுவர் பாடல்கள்)

## ச. அருளானந்தம்

599082

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
Web Site : www.tamilvanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

599082

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ★ | சகோதரராய் வாழ்வோம் |
| ஆசிரியர் | ★ | ச. அருளானந்தம் |
| மொழி | ★ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ★ | 2005 |
| பதிப்பு விவரம் | ★ | முதல் பதிப்பு |
| உரிமை | ★ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ★ | 16 கி.கி. |
| நூலின் அளவு | ★ | டெம்மி (14½ x 21½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ★ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ★ | vi + 94 = 100 |
| உள்பட ஓவியங்கள் | ★ | ச.அ. அருள் பாஸ்கர் |
| அட்டைப்படம் | ★ | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ★ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ★ | எம்.கே. எண்டர் பிரைசஸ், சென்னை – 5 |
| நூல் கட்டுமானம் | ★ | தையல் |
| வெளியிட்டோர் | ★ | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |

இந்திய விலை : ரூ. 50.00

இலங்கை விலை : ரூ. 170.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY ... 13 OCT 2006 LIBRARY

# அணிந்துரை

'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று' என்பது அறிஞர் கருத்தாகும். அந்த வகையில் சிறுவர்களின் மனோபாவங்களை அறிந்து அவர்களைப் போல் மாறி பாடல்களைப் புனைவது இலகுவான காரியமல்ல. அதற்கென சாதுரியமும், பயிற்சியும் தேடலும் தேவை. சிறுவர்கள் உண்மையிலேயே விசித்திரமானவர்கள். அடித்தால் அழுவார்கள். அணைத்தால் சிரித்து மகிழ்வார்கள். சிறுவர்கள் என்ற பதம் விசாலமானது. பிறந்தது முதல் பதினெட்டு வயது வரையுள்ள ஆண், பெண் அனைவரையும் உள்வாங்கும் சொல். இந்த வயதினருக்கு ஏற்ற வகையில் எழுதவேண்டும். வயதின் அடிப்படையில் வெவ்வேறாக எழுதினால் பொருளாதாரம் முடக்கி விடும். ஆதலால் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் பெரியவர்கள் பாடிக் காட்டும் வண்ணமும், பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் ஆசிரியர்கள் பாடிக் காட்டும் வண்ணமும் பின்னர் சற்று வளர்ந்த சிறுவர்கள் தாமாகவே படித்துச் சுவைக்கும் வண்ணமும் எழுதி முழுமையாக்கி நூலாக வெளியிட வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் அருளானந்தம் அவர்கள் தனது அறிவு முதிர்வின் மூலம் புரிந்து, அனுபவமாக்கி அவர்களது வயதுக்கேற்ப கருக்களையும், சின்னச் சின்ன எளிமையான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பாடல்களை யாத்தும், பிறந்தது முதல் பதினெட்டு வயது வரையும், பின்னர் பெரியவர்களும் படித்துச் சுவைக்கும் வண்ணம் அருமையான பாடல்களாக யாத்து வெளியிடுகிறார்.

கிராமத்திலே பிறந்து, கிராமியக் காற்றினைச் சுவாசித்துத் தான் கண்டுகொண்ட, அனுபவித்த அத்தனை விடயங்களையும், காட்சிகளையும் உள்வாங்கிப் பல சிறுவர் இலக்கியங்களைப் படைத்துள்ளார். திரு. ச. அருளானந்தம் அவர்கள் சிறுவருக்கான கருத்துப் பாடல்கள் அடங்கிய நூலாகத் தொகுத்துச் 'சகோதரராய் வாழ்வோம்' என்ற தலைப்புக் கொண்டதாய் இந்த நூலினைத் தந்துள்ளார். இந்த நூலில் பொதிந்துள்ள விடயங்கள் பொருள் நிறைந்தனவையாகவும், விளக்கப் பூர்வமானவையாகவும் விளங்குகின்றன. நமது சிறுவர்களுக்குத் தெரிந்த, அல்லது தெரிந்திராத பல விடயங்களை இந்த நூலில் காட்டியிருப்பதும், சிறார்களது சிந்தனையைத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளமை பாராட்டிற்குரியது.

மேலைத் தேசங்களோடு ஒப்பிடும்போது சிறுவர் இலக்கியத் துறைக்கு நமது நாட்டில் உற்சாகமூட்டுவோர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். இந்த வேளையில் ஈழத்தில் தலைநகர் திருக்கோணமலையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 OCT 2006



வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. பல அரிய கருத்துக்களும், கற்பனைத் திறனும், ஓசை நயமும் இந்நூலில் பொதிந்துள்ளன. விஞ்ஞான விந்தைகள் நெளிகின்றன. சிந்தனைகளைக் கிளறி விடும் வினாக்களும் மின்னுகின்றன.

விண்ணை அளந்து நிலவிலே
வீடு கட்ட விரைந்திடு
மண்ணின் வீரன் நீயென
மகிழப் பயணம் செய்திடு
ஆம்ஸ்ரோங் வைத்த காலடி
அடுத்து வைப்ப தாரடி?

இவைபோன்ற வரிகள் சிறுவர்களின் சிந்தனையைக் கிளறித் தேடல் திறனை வளர்த்தெடுப்பதாக அமைகின்றன. இந்நூலில் காணப்படும் பாடல்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் நல்ல கருத்துக்களைக் கூறி நிற்கின்றன. இலங்கையில் மட்டுமல்ல, உலக நாடுகளிலும் இன, மதப் பூசல்கள் உள்ளன.

இந்து இஸ்லாம் பௌத்தவரும் – நல்
இனிய கிறிஸ்த்து மதத்தவரும்
இந்த மண்ணின் மைந்தர்களே – பின்
ஏனிந்த வேற்றுமை நமக்குள்ளே.

இக்கருத்து முக்கியமானது. இதனைக் கருத்தில் கொண்டு சகோதரராய் வாழ்வோம் எனக் காட்டுகிறார். இந்நூலில் வரும் சகல பாடல்களும் சிறுவர்களோடு பெரியவர்களும் சேர்ந்து பாடக்கூடியன. பல்வேறு சூழ்நிலைகளால் சிறுவர்களின் மனோ நிலை பாதிப்புக்குள்ளாகி நடத்தைக் கோலங்களில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி வரும் தற்காலத்தில் சிறுபிராயத்தில் இருந்தே உலகினைப் புரிந்துகொள்ள இப்பாடல்கள் துணைபுரியும் எனத் திடமாக நம்பலாம். இத்தகைய பாடல்கள் அடங்கிய நூலினை வெளிக்கொண்டு வருவதற்குப் பாடுபட்டவர்கள் பாராட்டுக்குரியவர்கள். கருத்துமிக்க அழகிய ஓவியங்களை வரைந்த அருள் பாஸ்கரன் பாராட்டுக்குரியவர் ஆகின்றார். அனைவரும் இந்நூலை வாங்கிப் பயனடையவும், ஆதரவு நல்கவும் யாசிக்கின்றேன்.

திருமதி. சந்திரா பாலசுப்பிரமணியம்,
அதிபர்
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி,
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

சிறுவர் உலகம் புதுமையானது. சிறுவர்கள் மிகவும் ஆர்வமுடையவர்கள். ஆற்றலும் துணிச்சலும் மிக்கவர்கள். யாவற்றையும் அறிந்துகொள்ளும் இயல்பினர். அவர்கள்தாம் அறிவின் சுரங்கம். அந்தச் சுரங்கத்தில் புதைந்துள்ள ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்குச் சரியான வழிகாட்டல்கள் அவசியமாகின்றன. இந்த உலகம் அற்புதமானது. இந்தச் சூழல் இனிமையானது. சிறுவர்களின் உள்ளத்தைத் தொட்டு அறிவை வளர்க்கவல்லது. நமது உலகத்துக்கும் சிறுவர்களது உலகத்துக்கும் வித்தியாசம் உண்டு. சிறுவர்கள் இந்த உலகத்தின் விஞ்ஞானிகள். அவர்கள் உலகத்தில் ஒற்றுமையுண்டு. வஞ்சகம் இல்லை. உண்மையுண்டு, பொய்யில்லை. பஞ்சமாபாதகங்கள் அவர்களிடம் இல்லை. அவர்களது இயல்பினை நன்கு புரிந்துகொண்டு வழிகாட்டுதல் பெரியவர்களது கடமையாகும்.

வானத்தின் புதுமைகளை நாம் சாதாரணமாகப் பார்த்துவிட்டுச் செல்கிறோம். வானவில்லின் வர்ணஜாலங்கள் நமது உள்ளத்தைத் தொடுவதில்லை. காரணம்? வாழ்க்கையின் சுமையில் நாம் அமிழ்ந்து விடுகிறோம். சிறுவர்கள் எதனையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் உடையவர்கள். ஆடுவதும், ஓடுவதும், பாடுவதுமாய் படு சுறுசுறுப்பாகச் சிறார்கள் இயங்குவார்கள். அவர்களது உள்ளத்தில் அன்பும், அறமும், இரக்க சுபாவமும், நேர்மையும் துளிர்விடும் கருத்துக்களோடு மனிதநேயத்தை வலியுறுத்தும் கருக்களும் முளைவிட்டு மலரவேண்டும். அதற்கேற்றவாறு சிறுவர் இலக்கியங்கள் பல்கிப் பெருக வேண்டும். எனது பாடல்களும் ஏனைய சிறுவர் கதைகளும், சிறுவர் நாவல்களும் இவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

சிறுவர்களுக்காக எழுதுவது மகிழ்ச்சியானது. காரணம்? நாம் சிறுவர்களாகவே மாறிப் பழைய சிந்தனைகளுள் அமிழ்ந்து, கற்பனையுலகில் புகுந்து சிறுவர்களாக மாறி இன்புறுகிறோம். அதிலே ஒரு சுகம் இருக்கிறது. அந்தச் சுகம் அலாதியானது. அனுபவித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும்போது படிப்பவர்களது உள்ளத்தையும் தொட்டுச் சுகமேற்படுத்தும். சிறுவர் பாடல்கள் எளிமையாக அமைவது அவசியமாகிறது. எனது பாடல்களைப் பல ஆசிரியர்கள் பாடங்களோடு இணைத்துக் கற்பிக்கின்றார்கள். எந்த மெட்டிலும் பாடக்கூடியதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. பல நூல்களுக்கு இலங்கை அரசின் சாகித்தியப் பரிசில்கள் கிடைத்தன. இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட திரு. ரவி தமிழ்வாணன் அவர்கள் அறிவுரை வழங்கினார். அதன் அடிப்படையில் 'சகோதரராய் வாழ்வோம்' என்ற நூலாக வெளிவருகிறது. அவருக்கு எனது மனமார்ந்த நன்றி. இந்த நூலாக்கத்துக்கு மணிமேகலைப் பிரசுரத்தார் எடுத்துக்கொண்ட சிரமம் அளப்பரியது. எனது பங்களிப்பு மிகமிகக் குறைவு. அவர்களது விடாமுயற்சியே வாசகர்களாகிய உங்களது கைகளில் எனது நூல் வந்து வீழ்ந்துள்ளது. படங்களை வரைந்த ச.அ. அருள்பாஸ்கரன், அணிந்துரை வழங்கிய அதிபர் திருமதி. சந்திரா பாலசுப்பிரமணியம், பின்னட்டையில் என்னை அறிமுகமாக்கும் கவிஞர் ஆலையூரன், க. தங்கராஜா ஆகியோர் நன்றிக்குரியவர்கள். உங்களது ஊக்குவிப்புத்தான் என் போன்ற எழுத்தாளர்களை ஊக்குவிப்பன. இந்த நூலில் அடங்கியுள்ள பாடல்கள் பற்றிய கருத்துரைகளை வரவேற்கின்றேன். அனைவருக்கும் நன்றி.

37/7, மத்திய வீதி,
உவர்மலை,
திருக்கோணமலை

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. சகோதரராய் வாழ்வோம் ........ 1
2. பட்டம் கட்டி ஆடுவோம் ........ 2
3. பட்டம் விடும் போட்டி ........ 3
4. அழகு பொங்கும் வீடு ........ 4
5. எங்கள் குடும்பம் ........ 5
6. வீட்டுத் தோட்டத்திலே ........ 6
7. தபாற்காரர் வருகிறார் ........ 7
8. சுத்தம் பேணுவோம் ........ 8
9. எலி விளையாட்டு ........ 9
10. சிட்டுக்குருவிபோல ........ 10
11. காய்கறி ........ 11
12. நீர் விளையாட்டு ........ 12
13. ஆடிப்பாடுவோம் ........ 13
14. சேர்ந்து வாழுவோம் ........ 14
15. மெல்ல காற்று வீசும் ........ 15
16. நாம் ஊஞ்சல் ஆடுவோம் ........ 16
17. பூவைப் பாருங்கள் ........ 17
18. கொண்டைக் கிளார் கூடு ........ 18
19. பள்ளி வாழ்க்கையிலே ........ 19
20. மேகந் திரண்டு வருவதைப் பார் ........ 20
21. வாலை வாலை ஆட்டும் ........ 21
22. சின்னச் சின்ன ரோஜாவே ........ 22
23. அணிலும் ஆந்தையும் ........ 23
24. எங்கள் அதிபர் ........ 24
25. அம்மா பாடும் பாட்டு ........ 25
26. கண்ணழகுச் சிட்டு ........ 26
27. கேளுங்கள் ........ 27
28. பாடுவோம் ........ 28
29. பழகிக் கொள் ........ 29
30. அதிகாலையில் ........ 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. வாழ்ந்து காட்டுவோம் ........ 31
32. தோட்டமும் பறவைகளும் ........ 32
33. கிளி அக்கா ........ 33
34. இலங்கைத் தீவு ........ 34
35. புதுமைகள் ........ 35
36. வீட்டைத் தேடு ........ 36
37. உழுத்தம் பணியாரம் ........ 37
38. வெயிலும் மழையும் ........ 38
39. வானொலி ........ 39
40. முயன்று பார் ........ 40
41. முதியோரை மதிப்போம் ........ 41
42. சின்ன வண்ணச் சிலந்தியார் ........ 42
43. மழைத்துளி ........ 43
44. வண்ண நிலவு ........ 44
45. அதிசயம் பார் ........ 45
46. பயணம் ........ 46
47. ஓடிப் பழகு ........ 47
48. கடலும் பயனும் ........ 48
49. வானும் மரமும் ........ 49
50. பள்ளி செல்வோம் ........ 50
51. தாயும் சேயும் ........ 51
52. சோடிக் காளைகள் ........ 52
53. வதைப்பதேனோ? ........ 53
54. இறைவன் படைப்பு ........ 54
55. சேர்ந்து ஆடுவோம் ........ 55
56. ஏழ்மை போக்குவோம் ........ 56
57. ஊசி மிதக்கும் ........ 57
58. காளான் குடை ........ 58
59. பாடி ஆடுவோம் ........ 59
60. சுழன்று ஆடுங்கள் ........ 60
61. பாடல் கேளுங்கள் ........ 61
62. பாடு தம்பி ........ 62
63. பால் நிலாவைப்பார் ........ 63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 64. | ஊஞ்சல் ஆடுவோம் | 64 |
| 65. | அப்பாவும் தம்பியும் | 65 |
| 66. | அப்பாவும் நானும் | 66 |
| 67. | பாலைப்பருக வேண்டும் | 67 |
| 68. | அக்கா பள்ளி போகிறாள் | 68 |
| 69. | ஆடுது மயில் | 69 |
| 70. | மனம் துள்ளுது | 70 |
| 71. | பூக்கள் | 71 |
| 72. | எங்கள் வீடு | 72 |
| 73. | கோச்சி வருது | 73 |
| 74. | சேவலும் காவலும் | 74 |
| 75. | தம்பியும் சைக்கிளும் | 75 |
| 76. | சைக்கிள் ஓடுவான் | 76 |
| 77. | காகமும் செயலும் | 77 |
| 78. | காகமும் பருந்தும் | 78 |
| 79. | காகமும் பருந்தும் | 79 |
| 80. | காகமும் நாயும் | 80 |
| 81. | காகமும் சூழலும் | 81 |
| 82. | காகமும் விருந்தும் | 82 |
| 83. | காகமும் கடமையும் | 83 |
| 84. | காகமும் சோகமும் | 84 |
| 85. | காகமும் தம்பியும் | 85 |
| 86. | காகமும் குயிலும் | 86 |
| 87. | காகமும் விரதமும் | 87 |
| 88. | காகமும் பசுவும் | 88 |
| 89. | காகமும் உடலும் | 89 |
| 90. | காகமும் பார்வையும் | 90 |
| 91. | காகமும் பாம்பும் | 91 |
| 92. | காகமும் தலைமையும் | 92 |
| 93. | காகமும் காவிரியும் | 93 |
| 94. | காகமும் அறிவும் | 94 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகோதராய் வாழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகோதரராய் வாழ்வோம்

நதிகள் பிறப்பது மலைமுடியில் - அவை
நெளிந்து ஊர்வது மண்மடியில்
குதித்துச் சேர்வது கடலடியில் - அந்தக்
கருத்தைப் போற்றுவோம் மனதடியில்.

வெற்றிலை பாக்குச் சுண்ணாம்பு - நம்
வாயில் கலந்து சிவப்பாகும்.
கற்றிதை மனதில் கொள்வோமே - சேர்ந்து
காணும் சொர்க்கம் மகிழ்வோமே.

இந்து இஸ்லாம் பௌத்தர்களும் - நல்
இனிய கிறிஸ்து மதத்தவரும்
இந்த மண்ணின் மைந்தர்களே - பின்
ஏனிந்த வேற்றுமை நமக்குள்ளே

ஒற்றுமை நமக்குள் வரவேண்டும் - நாம்
உறவும் உரிமையும் பெறவேண்டும்.
மற்றவர் போற்ற இலங்கையராய் - இங்கு
மகிழ்ந்து வாழ்வோம் சகோதரராய்.

UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் கட்டி ஆடுவோம்



பட்டம் ஒன்று கட்டுவோம்
பறக்க விட்டுக் காட்டுவோம்
எட்டு மூலைப் பட்டத்தை
ஏற்றி விளை யாடுவோம்...

மயிலைப் போல பட்டமாம்
வண்டு போன்ற பட்டமாம்
குயிலைப் போன்று வானிலே
கூவும் விண்ணும் கட்டுவோம்

வண்ணத் தாளை வெட்டுவோம்
வெட்டி அளவாய் ஒட்டுவோம்
கண்ணைப் பறிக்கும் நிறத்திலே
கட்டிப் பட்டம் ஏற்றுவோம்

நூலைக் கட்டிக் கொள்ளுவோம்
நுனியைப் பிடித்துக் கொள்ளுவோம்
வாலை ஆட்டிப் பட்டமும்
வடிவாய் காற்றில் பறக்குதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் விடும் போட்டி

பெண்ணம் பெரிய வெளியிலே
பட்டம் விடும் போட்டியாம்
அன்னம் போல பட்டங்கள்
ஆடி வானில் பறக்குது

ஆளுக் கொரு கையிலே
ஆடும் பட்டம் வானிலே
நூலைக் கையில் ஏந்தியே
நீட்டி இழுத்துப் பிடிக்கிறார்

வால் தொலைத்த பட்டங்கள்
வட்டம் அடித்துச் சுழலுது
நூல் அறுந்த பட்டங்கள்
நூறு மீற்றர் போகுது

வானம் நிறைந்து பட்டமாய்
வண்ணக் காட்சி காட்டுது
வானைப் பார்த்துக் கூட்டமாய்
வந்து மக்கள் ரசிக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு பொங்கும் வீடு



அழகு பொங்கும் வீடு – எங்கள்
அப்பா தந்த வீடு
பழகி வாழும் வீடு – எம்மை
பாது காக்கும் வீடு

மெல்லக் காற்று வந்து – எங்கள்
மேனி தொட்டுப் போக
நல்ல யன்னல் கதவும் – சுற்றி
நாலு பக்கம் உண்டு

அப்பா வெளியில் போனால் – எங்கள்
ஆட்சி நடக்கும் வீடு
அப்பா தந்த செல்வம் – இது
அம்மா வாழும் இல்லம்

வெள்ளைச் சுவரின் மேலே – எம்
வண்ணப் படங்கள் ஓடும்
கள்ளத் தீனி எடுத்து – நாங்கள்
களித்து உண்ணும் வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்பம்



எங்கள் இன்பக் குடும்பம் – அதை
எண்ணும் போதும் இன்பம்
தங்கத் தாத்தா தலைமை – இனிது
தாங்கும் எங்கள் குடும்பம்

உழைத்து வருவார் அப்பா – அன்பு
ஊட்டி வளர்ப்பார் அம்மா
அழைக்க மாமா மாமி – வந்து
அன்பாய் முன்னே நிற்பார்

சின்னச் சின்ன கதைகள் – தினம்
சேர்த்துப் பாட்டி சொல்வார்
அண்ணன் தம்பி அக்கா – சேர்ந்து
ஆடி வாழும் குடும்பம்

ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் – இந்த
உலகில் பெருமை பெறலாம்
என்று சொல்லும் பெரியோர் – இங்கு
இணைந்து வாழும் குடும்பம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டத்திலே

எங்கள் வீட்டுத் தோட்டம் ~ அதில்
எங்கும் பயிரின் ஆட்டம்
பொங்கி மனதைக் கிள்ளும் ~ அதைப்
பார்த்து பார்த்துத் துள்ளும்

தென்னை குலையோ டாடும் ~ அருகே
தேன் பலாவும் கூடும்
தின்ன இனிக்கும் மாங்கனி ~ நாவல்
தந்தே நிற்கும் தேங்கனி

வாழை கொய்யா மாதுளை ~ நித்தம்
வழங்கும் தோடை தேன்சுளை
பாளை தொங்கும் கமுகிலே ~ பனையின்
பழமும் சொரியும் தரையிலே

வண்ணப் பூக்கள் கூத்திடும் ~ வண்டு
வட்டம் அடித்துப் பார்த்திடும்
மின்னும் சின்னப் பூக்களும் ~ மெல்ல
மேலே எட்டி நிமிர்ந்திடும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற்காரர் வருகிறார்

தபால் காரர் வருகிறார்
சைக்கிள் மணி அடிக்கிறார்
தபால் தபால் நீட்டுறார்
தந்து சிரித்துச் செல்கிறார்

பள்ளி செல்லும் பிள்ளைக்கும்
பாடம் சொல்லும் குருவுக்கும்
சொல்லி வைத்த நேரத்தில்
செய்தி தன்னைச் சேர்க்கிறார்

காக்கிச் சட்டை தொப்பியும்
கடிதம் சுமக்கும் செய்தியும்
தூக்கிச் சென்று தருகிறார்
சேவை செய்து திரிகிறார்

தூர இடத்துச் செய்தியை
சுமந்து வரும் அஞ்சலை
நேரம் பார்த்துச் சேர்த்திடும்
நேர்மை கொண்ட சேவகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தம் பேணுவோம்

குனிந்து குப்பை அகற்றுவோம்
கூட்டிச் சுத்தம் பேணுவோம்
கனிந்து வேலை செய்தலே
கடமை என்று போற்றுவோம்

சேர்ந்து வாழும் இடமெலாம்
சுத்தம் செய்து வைத்திடில்
ஊர்ந்து சேரும் நோய்நொடி
ஓடி மறைந்து போய்விடும்

தூய்மை செய்த ஆடையை
தொடர்ந்து உடுக்கப் பழகுவோம்
நோய்கள் இன்றி வாழ்தலே
நாட்டின் செல்வம் பாடுவோம்

கொதித்துக் குளிர்ந்த நீரையே
குடிக்க வேண்டும் கேளுங்கள்
குதித்து உடலைப் பேணினால்
கோடி காலம் வாழலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலி விளையாட்டு



சின்ன எலிகள் கூடி – மெல்லச்
சீண்டித் துள்ளி ஆடி
முன்னும் பின்னும் ஓடி – அவை
மகிழ்ந்து மோதும் சாடி

அரிசி பருப்புத் தேடும் – பரந்து
அலைந்து திரிந்து ஓடும்
அரிசிப் பானை உருளும் – எலி
அடுக் களையுள் சுருளும்

மெல்ல இருளும் பரவும் – எலிகள்
மகிழ்ந்து குலவிப் பிரியும்
செல்லப் பூனை பதுங்கும் – மூலை
பார்த்து எலியும் நடுங்கும்

பூனை பாய்ந்து சேரும் – கண்
பிதுங்க எலியும் பாயும்
பானை சட்டி புரளும் – அம்மா
பார்த்து விழிகள் மிரளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக் குருவிபோல



கூடு கட்டக் குருவிக்குயார்
சொல்லிக் கொடுத்தது
கூடி வானில் பறக்கயாரோ
கற்றுக் கொடுத்தது

சோடி சேர்ந்து வாழயாரோ
சொல்லித் தந்தது
தேடி உணவை உண்ணயாரோ
காட்டித் தந்தது

கிழக்கு வெளிக்கும் முன்னேகுருவி
களித்துப் பாடுது
விளக்கு வைக்கும் முன்னேகூடு
விரைந்து செல்வது

முட்டை இட்டுக் குஞ்சுபொரித்து
மகிழ்ந்து வாழுது
சிட்டுக் குருவி போல நாமும்
சேர்ந்து வாழுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறி



நிலத்தில் பாத்தி கட்டுவோம்
நீரை அதற்குள் ஊற்றுவோம்
கிளறி விதையை ஊன்றுவோம்
கணித்து நாளை எண்ணுவோம்

சின்னச் சின்ன முளைகளும்
சிரித்து எட்டிப் பார்த்திடும்
தண்ணீர் விட்டு அளவுடன்
தினமும் காவல் செய்குவோம்

செடியும் வளர்ந்து பூத்திடும்
சிறிது நாளில் காய்த்திடும்
கொடியும் படர்ந்து வளர்ந்திடும்
கொத்தாய் காய்கள் தொங்கிடும்

தோட்டம் நிறைந்து காய்கறி
துள்ள வைத்துக் கூத்திடும்
ஊட்டம் உள்ள உணவுகள்
உண்ணத் தந்து காத்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் விளையாட்டு



வானம் இருண்டு வந்தது
மழையும் பொழிந்து ஓய்ந்தது
கானல் ஓடி மறைந்தது
கசிந்து ஈரம் உறைந்தது

வெள்ளம் ஆறாய் பாய்ந்தது
மண்ணும் இரைந்து ஓய்ந்தது
வெள்ளைத் தாளில் கப்பல்கள்
விரைந்து சிறுவர் செய்தனர்

ஓடி எடுத்து வந்தனர்
ஒன்றாய் நீரில் விட்டனர்
ஆடி ஆடிக் கப்பல்கள்
அசைந்து மிதக்கக் கண்டனர்

புல்லை அதனுள் போட்டனர்
படகு போலே மிதந்தது
கல்லை நிரப்பிப் பார்த்தனர்
கப்பல் நீருள் ஆழ்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப் பாடுவோம்




அன்பை அம்மா ஊட்டுவார்
அறிவை அப்பா காட்டுவார்
அண்ணா காவல் செய்குவான்
அக்கா அணைத்துக் கொள்ளுவாள்

பாடம் சொல்லித் தந்தவர்
பாரில் தெய்வம் போற்றுவோம்
ஆடல் பாடல் யாவையும்
அறிந்து கற்கத் தேடுவோம்

உண்மை பேசி உயருவோம்
உறவைப் பெருக்கி வாழுவோம்
எண்ணத் தெளிவை பெற்றிடில்
எடுத்த செயலை முடிக்கலாம்

சோம்பல் தன்னை விரட்டுவோம்
சுழன்று சேவை செய்குவோம்
ஆம்பல் போல மகிழ்ந்துமே
ஆடி ஆடிப் பாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்து வாழ்வோம்



சின்னத் தம்பி பார்க்கிறான்
சேர்ந்து ஆட வருகிறான்
அன்பால் அவனை ஆளுவோம்
அணைத்து ஒன்றாய் வாழுவோம்

உயிர்கள் அனைத்தும் தோழர்கள்
உறவு பூண்டு வாழுவோம்
பயின்ற கல்விப் பயனதால்
பயன் அடைந்து மகிழுவோம்

இந்து இஸ்லாம் பௌத்தமும்
இனிய கிறிஸ்த்து வேதமும்
சொந்தம் மனித உயிருக்கே
சண்டை இதிலேன் நமக்குள்ளே

அரிதாம் மனிதப் பிறவியாம்
அன்பே இன்ப ஊற்றதாம்
பெரியோர் சொல்லைக் கேட்டுமே
பெருமை பெற்று வாழுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லக் காற்று வீசும்

மெல்லக் காற்று வீசும் - எங்கள்
மேனி தொட்டுப் போகும்
செல்லம் என்று கிள்ளும் - உடல்
சுகம் தழுவிக் கொள்ளும்

கட்டி அணைத்துச் சொல்லும் - நம்
காதில் ஊதிச் செல்லும்
முட்டி ஆடும் தென்னை - அந்த
மழைக்கும் காற்றே அன்னை

மூக்கு வழியால் காற்று - நம்
மூச்சுப் பைக்குள் போகும்
காக்கும் உயிரைக் காற்று - அதில்
காணும் தூய்மை போற்று

சுத்தம் உள்ள காற்று - நமக்கு
சுகத்தைத் தந்து போற்றும்
சுத்தம் சூழல் கண்டால் - நம்
சுற்றம் நீடு வாழும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஊஞ்சல் ஆடுவோம்



ஊஞ்சல் ஆடுவோம் - நாம்
ஊஞ்சல் ஆடுவோம்
உந்தி உந்தி ஆடி - எம்
உள்ளம் மகிழ்ந்து பாடி
(ஊஞ்சலாடுவோம்.....

அம்மா அப்பா பாட - எங்கள்
அண்ணா தாளம் போட
தம்பி சேர்ந்து ஆட - பக்கம்
தங்கை துள்ளிப் பாய
(ஊஞ்சலாடுவோம்...

மாமி மாமா வாழ்த்த - மக்கள்
மனது குளிர வேண்டும்
பூமி செழிக்க மழையும் - கொட்ட
பாட்டுப் பாட வேண்டும்.
(ஊஞ்சலாடுவோம்......

நாடு வாழ வேண்டும் - இங்கு
நல்ல மனிதர் வேண்டும்
தேடு கல்வி தன்னை - இந்த
தேசம் காண வேண்டும்
(ஊஞ்சலாடுவோம்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவைப் பாருங்கள்



அல்லிப் பூவைப் பாருங்கள் - அதன்
அழகு இதழைப் பாருங்கள்
சொல்லிச் சொல்லிப் பாடுங்கள் - அதை
தொட்டு மணந்து பாருங்கள்

வெள்ளை நிறத்துப் பூக்கள் - இரவில்
விரிந்து மனதைப் பறிக்கும்
அள்ளும் வண்ணப் பூக்கள் - பகலில்
அலர்ந்து காற்றை வெறிக்கும்



வாசம் உள்ள பூக்களும் - பல
வண்ண நிறத்துப் பூக்களும்
ஈசன் விரும்பும் பூக்களே - அவர்க்கு
ஏதும் பேதம் இல்லையாம்

சின்னப் பூக்கள் நாங்களே - ஈசன்
சிந்தி விட்ட பூக்களாம்
அன்பு கொண்டு வாழுவோம் - சேர்ந்து
ஆடி ஆடிப் பாடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டைக் கிளார் கூடு



கொண்டைக் கிளார் கூடு – அதில்
கூடும் பறவை பாரு
சண்டை அங்கு உண்டா – சிறு
சச்சரவும் உண்டா



கூடி இரண்டும் ஒன்றாய் – தினம்
குலவிக் குலவிப் பாடி
ஆடிப் பறந்து சேர்ந்து – வானில்
அன்பு கொண்டு வாழும்

கூடு சேர்ந்து கட்டி – அளவாய்
குஞ்சு பொரித்து வாழ்ந்து
தேடும் சுகமோ பெரிது – இதை
தெரிந்து கொண்டு வாழ்வோம்

தீங்கு செய்வ தில்லை – யார்க்கும்
தீமை நினைப்ப தில்லை
வாங்கும் உயிரை மட்டும் – இந்த
மனிதர் செய்தல் ஏனோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வாழ்க்கையிலே

காலை பள்ளிக்கு வருவோமே
கடவுளை வணங்கிப் படிப்போமே
மாலையில் ஆடி மகிழ்வோமே
மனதைப் பழக்கிக் கொள்வோமே



குரங்கு பாயும் குயில் பாடும்
கோல மயிலும் களித்தாடும்
மரமும் மலரும் நம் தோழர்
மாடும் ஆடும் கூட்டாளி

பாம்பு பக்கம் வந்தாடும்
பாயும் புலியும் சேர்ந்தாடும்
சோம்பல் இல்லை சொர்க்கம் தான்
சேரும் பள்ளி வாழ்க்கையிலே

நிம்மதி பள்ளியிற் தானுண்டு
நீடு வாழவும் வழியுண்டு
நம்பிக்கை ஒன்றே துணையாகும்
நல்லவை செய்து உயர்வோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேகம் திரண்டு வருவதைப் பார்



மேகம் திரண்டு வருவதைப் பார் - மெல்ல
மேலே எழுந்து திரள்வதைப் பார்
தாகம் கொண்ட மரஞ்செடி பார் - அவை
தவித்து வாடிச் சோர்வதைப் பார்

குளிர்ந்து காற்று வீசுது பார் - மரம்
கண்டு மகிழ்வால் ஆடுது பார்
சிலிர்த்து மழையும் பொழியுது பார் - வானம்
சிரித்து மின்னல் அடிக்குது பார்

நிலத்தில் நீரும் ஓடுது பார் - அது
நிலத்தின் நிறத்தில் கலக்குது பார்
குளித்து மரஞ்செடி குனியுது பார் - காகம்
கொப்பில் இருந்து குளிப்பதைப் பார்

குளத்தில் மழைநீர் சேருது பார் - நம்
கிணறும் நிரம்பி வழியுது பார்
விளையும் பயிருக்கு மழை வேண்டும் - எந்த
வாழ்வும் வளமுற மழை வேண்டும்.



13 OCT 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலை வாலை ஆட்டும்



வாலை வாலை ஆட்டும்
வளைந்து முகத்தை நீட்டும்
காலை மடித்துக் கெஞ்சும்
கரணம் அடித்துக் கொஞ்சும்

முன்னங் காலைத் தூக்கும்
முன்னால் பாய்ந்து குரைக்கும்
பின்னங் காலால் நடக்கும்
பெரிய வித்தைகள் காட்டும்

எறியும் பந்தையும் கௌவும்
எடுக்க உதவியும் செய்யும்
பறித்துக் கொண்டுமே ஓடும்
பதுங்கி வந்துமே சேரும்

நல்ல நண்பனாம் நாய்தான்
நாளும் வீட்டைக் காக்கும்
கள்வர் தொல்லைகள் இல்லை
கவலைகள் நமக்கும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்ன ரோஜாவே

சின்னச் சின்ன ரோஜாவே
சிரிக்கும் வண்ண ராஜாவே
கண்ணின் ஒளியே ஓடிவா
கரும்பே தேனே ஆடிவா

வண்ணச் சட்டை போட்டுமே
வந்து நிற்கும் சிட்டுநீ
உன்னை வாழ்த்தி உலகமே
உறுதி கொண்டு நம்பணும்

மண்ணில் அன்பு மலரணும்
மனதில் தூய்மை விரியணும்
அன்பால் உலகை ஆளணும்
அறிவால் உயர்ந்து வாழணும்

ஓடிப் பாடி ஆடுவோம்
ஒன்றாய் சேர்ந்து பாடுவோம்
கூடிப் பாடி ஆடவா
கொடுப்புள் சிரித்து ஓடி வா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிலும் ஆந்தையும்

அணில் ஒன்று திரிவதை
ஆந்தை இருந்து கண்டது
இனிய உணவு இன்றென
ஈர்க்கும் கண்ணால் பார்த்தது

உணவு கொள்ளும் நேரமோ
ஊர்ந்து ஊர்ந்து வந்தது
எனது வயிற்றில் பசியில்லை
ஏனேன் என்று கேட்டது

ஐயர் வந்து மரத்தின் கீழ்
ஒதுங்கி இருந்து பார்த்தனர்
ஓய்ந்து இருந்த காற்றுமே
ஔவை பெயரைச் சொன்னது

மரத்தின் கிளையில் அணிலையும்
மரத்தின் பொந்தில் ஆந்தையும்
இருக்கக் கண்ட ஐயரின்
இதயம் என்ன நினைத்ததோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




எங்கள் அதிபர் வருகிறார்
எழுந்து வணக்கம் சொல்லுவோம்
பொங்கும் அவரின் சிரிப்பிலே
புதிய நாளைத் தொடங்குவோம்

பிரம்பு கையில் இல்லையாம்
பேச்சும் ஏச்சும் இல்லையாம்
அரும்பும் கனிவு முகத்திலே
அவர்தான் எங்கள் அதிபராம்

திறந்த வெளியில் ஆடுவோம்
சேர்ந்து அதிபர் பாடுவார்
சிறந்த அறிவு பெற்றிட
செயல் முறையில் பயிற்றுவார்

அன்பாய் வாழ்த்துக் கூறுவார்
அறிவின் வழியும் காட்டுவார்
என்றும் அன்பாய் வாழவே
இனிய விழியால் வாழ்த்துவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா பாடும் பாட்டு

சின்னச் சின்னப் பாட்டு – நாம்
சேர்ந்து பாடும் பாட்டு.
அன்பைக் கூறும் பாட்டு – நல்
அறிவை ஊட்டும் பாட்டு.



ஆடிப் பாடும் பாட்டு - அம்மா
அணைத்துப் பாடும் பாட்டு.
கூடி மகிழும் பாட்டு – நம்
குணம் வளர்க்கும் பாட்டு.

திருக் குறளை ஓதும் - அதில்
சிலம்பு கதை மோதும்.
தரும நெறி பாடும் - மனச்
சாந்தி வந்து கூடும்.

தேடித் தெய்வம் வாழ்த்தும் - நம்மை
தீந் தமிழில் ஆழ்த்தும்.
பாடிப் பாடி ம்கிழ்வோம் - அன்னை
பாட்டைப் பாடி வாழ்வோம்.



599082
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணழகுச் சிட்டு.



கண் அழகுச் சிட்டு - என்
கருத்துக் கினிய மொட்டு.
எண்ணம் நிறைந்த முத்து — எம்
இதயம் நிறைந்த சொத்து.

அன்னை வாழ்வு சிறக்கும் - உன்
அறிவு ஊன்றிச் சுரக்கும்.
என்னை ஊரார் புகழ்வார் - அப்பா
எண்ணிப் பார்த்து மகிழ்வார்.

அண்ணன் அக்கா வருவார் - பரிசு
அன்பு நண்பர் தருவார்
மண்ணில் வாய்த்த செல்வம் - எம்
மனதில் புரளும் வெள்ளம்.

உலகம் வாழ வேண்டும் - உன்னை
ஊரார் புகழ வேண்டும்.
பலதும் கற்க வேண்டும் - இந்த
பாரை உயர்த்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேளுங்கள்

அம்மா சொல்வதைக் கேளுங்கள்
அன்பாய் சேர்ந்து வாழுங்கள்
அம்மா உங்கள் உளவுறுதி
அப்பா உங்கள் உடலுறுதி.



அன்பும் அறமும் போற்றுங்கள்
அடுத்தவர் துயரைப் போக்குங்கள்
என்றும் இறைவனைப் போற்றுங்கள்
இறையருள் பெற்றுமே வாழுங்கள்.

விரும்பியே உதவிகள் செய்யுங்கள்
மேலோர் வாழ்த்தைத் தேடுங்கள்
குருவழி காட்டி துணைவருவார்
கூடி வாழ்ந்திட வழிதருவார்.

கல்வி நமதிரு கண்ணாகும்
கடமையே நமதரும் சொத்தாகும்
செல்வழி புரிந்து செல்லுங்கள்
செல்வம் சேரும் வெல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடுவோம்

ஓடி வாங்க பாலர்காள்
ஒன்றாய் பள்ளி செல்லுவோம்
கூடி ஆடிப் பள்ளியில்
கூட்டம் போட்டுப் பாடுவோம்

வகுப்பைச் சுத்தம் செய்குவோம்
வளைந்து நிமிர்ந்து கொள்ளுவோம்
சுகத்தை வாழ்வில் தேக்குவோம்
சொர்க்கம் சேரும் ஆடுவோம்.

சந்தை வீடு கட்டுவோம்
சாமான் விற்று வாங்குவோம்
பந்தை உருட்டி வீசுவோம்
பாட்டுப் பாடி ஓடுவோம்.

ஆடிப் பாடிப் காட்டுவார்
ஆசான் அன்பை ஊட்டுவார்
தேடி அறிவை பெருக்குவோம்
தேசம் வாழப் பாடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழகிக் கொள்

பற்பொடி கையில் எடுத்துக்கொள்
பற்களை நன்றாய்த் துலக்கிக்கொள்
சொற்படி வாயைக் கழுவிக்கொள்
சுகமாய் இருக்கும் குளித்துக்கொள்.

அழகாய்ச் சட்டையைப் போட்டுக்கொள்
அம்மா சொல்வதைக் கேட்டுக்கொள்
பழகிப் பாலைக் குடித்துக்கொள்
பதமாய் உடலைப் பார்த்துக்கொள்.

புத்தகம் கையில் எடுத்துக்கொள்
பேனா பென்சில் தேடிக்கொள்
சுத்தமாய்க் காலணி துடைத்துக்கொள்
சோடி பார்த்துமே அணிந்துகொள்.



பாடம் தன்னில் கவனம்கொள்
படிப்பு முக்கியம் நினைவில்கொள்
கூடும் அறிவைத் தேடிக்கொள்
கூடியே வாழ்ந்திடப் பழகிக்கொள்.



UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதிகாலையில்

காலையில் கோழி கூவுமடா – விடி
காகம் கரைந்து எழுப்புமடா
சோலைகள் எங்கும் குயிலின்குரல் - அந்தச்
சுந்தர இசையுடன் சேருமடா.



பூனை நாய் நிமிர்ந்து வால்முறுக்கும் - புதுப்
பூக்களும் மலர்ந்து தேன்சுரக்கும்
தானைத் தலைப் பசு முன்நடக்கும் - பின்
தொடர்ந்துமே மாடுகள் தான்நடக்கும்.

சுறுசுறுப் பாகி எறும்புகளும் - ஒன்று
சேர்ந்துமே உணவினைச் சேகரிக்கும்
விறுவிறு எனவே தேனிகளும் - விரைந்து
வதையினில் தேனைச் சேர்த்தடைக்கும்.



நல்லவை நாமும் அறிந்திடவே – என்றும்
நம்மது சூழலே துணையாகும்
நல்லவை கற்று நாமுயர்வோம் - நம்
நாடு செழித்திடத் தினமுழைப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்ந்து காட்டுவோம்.





பாடசாலை சென்று நாங்கள்
படிக்கப் போகிறோம்
ஆடிப்பாடி மகிழ்ந்து ஒன்றாய்
வாழப் போகிறோம்.

எங்கள் வகுப்பைச் சுத்தம்செய்து
எழிலைக் காணுவோம்.
பொங்கும் அழகுப் பூஞ்செடிகள்
பூக்கும் நாட்டுவோம்.

சேரும் குப்பை கூளங்களை
குழியில் போடுவோம்.
சேர்ந்து அவை பசளையாகும்
தோட்டம் நாட்டுவோம்.

வாழும் வழி திறன்கள்யாவும்
வடிவாய்ப் படிப்போம்.
வாழும் உலகில் நல்லவராய்
வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டமும் பறவைகளும்.



மரங் கொத்தி மாமா வந்து
மேளம் தட்டுறார்
சிரம் ஆட்டி ஆட்டி ஓணான்
சீட்டி அடிக்கிறார்.

நாவல் மரத்தில் குயிலும் வந்து
நாதம் இசைக்கிறார்
ஆவல் கொண்ட காகக் குஞ்சார்
அசைந்து நடக்கிறார்.

தென்னை மரம் பாளை வெடித்துச்
சிரித்துக் காட்டுது.
புன்னை பூத்துப் புது மணத்தைப்
பரப்பி ஆடுது.

தாவரமும் விலங்கும் சேர்ந்து
தாளம் போடுது.
கேவலமாய் மனிதன் வாழ்க்கை
குலைந்து போனதேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி அக்கா



கிளி அக்கா நாவல் மரத்தில்
கிக்கீக் பாடுறார்
கிழிந்த வாழை மடலில் மைனா
கீதம் இசைக்கிறார்.

காக மகள் நடம் பயிலக்
குயிலும் பாடுறார்.
சோகம் மறந்து வாத்துக் குஞ்சார்
சேர்ந்து நடக்கிறார்.





ஆந்தை முக்க கானாங் கோழி
அலறிப் பதுங்கிறார்.
பேந்தப் பேந்த ஆக்காண்டியார்
பயந்து நடுங்கிறார்.

மயில் அண்ணா தோகை விரித்து
வளைந்து ஆடுறார்.
செயல் மறந்து சின்னப் பிள்ளை
சேர்ந்து ஆடுறார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தீவு



இந்து சமுத்திரம் இரைகிறது
இலங்கைத் தீவு மிதக்கிறது.
வந்து பார்க்கும் மனிதரெலாம்
வாழ்த்த இலங்கிச் சிறக்கிறது.



சுற்றி எறிந்து அலைபரவும்
துள்ளும் மீன்கள் கொண்டகடல்
எற்றித் தத்தும் திரவியங்கள்
எங்கும் கிடக்கும் கடற்கரைகள்.

மத்தியில் உயர்ந்து புடைத்திருக்கும்
மலைமுடி சூழ்ந்து நிமிர்ந்திருக்கும்
நித்திய நதிபல ஊற்றெடுக்கும்
நிறைபயிர் விளைந்து பாட்டெடுக்கும்.

தெங்கொடு பனையும் பணப்பயிர்கள்
தேங்கி விளைந்தொன்றாய் ஆடுநிலம்.
இந்தொடு பௌத்தர் கிறிஸ்தவரும்
இஸ்லாம் மக்களும் வாழுநிலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைகள்



ஒற்றைக் காலில் கொக்குத் தம்பி
உற்றுப் பார்க் கிறார்
முற்றம் நிறைந்து காகக் குஞ்சார்
முறைத்துப் பார்க் கிறார்

இரண்டு காலில் மனிதன் மட்டும்
எழுந்து நடக் கிறான்
வெருண்டு காட்டில் சில மிருகம்
வியக்க நடக் குமாம்

நாலு காலில் ஆட்டுக் குட்டி
நடந்து திரிகி றார்
பாலும் குடித்துக் கன்றுக் குட்டி
பாய்ந்து துள்ளு றார்



எட்டுக் காலில் நண்டுத் தம்பி
எப்படி ஓடு றார்
எட்டி இடம் வலமும் பார்த்து
இனிதாய் ஓடு றார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டைத் தேடு.



வீடு ஒன்றைத் தேடு - அதில்
வாழும் முறையில் வாழு.
தேடு செல்வம் கூடும் -உயர்வு
தேடி வந்து ஆடும்.

மழை பெய்யும் போதும் - கடும்
வெயில் காயும் போதும்.
களைத்து வந்த போதும் - எமைக்
காக்கும் நல்ல வீடு.

நோய்கள் வாட்டும் போதும் - மெல்ல
நாடி தளர்ந்த போதும்
பாய் விரித்துச் சாய்ந்து - அதில்
படுத்து உறங்க ஓயும்.

கறையான் புற்றும் வீடே - குருவி
கட்டும் கூடும் வீடே
நிறையும் மனித வாழ்வின் - இறுதி
நிலையும் அந்த வீடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழுத்தம் பணியாரம்.

அம்மா அடுக்குப் பண்ணினள்.
அடுப்பில் தீயை மூட்டினள்.
சும்மா கிடந்த தாச்சியை
தூக்கி அதிலே வைத்தனள்.

எண்ணெய் ஊற்றி விட்டனள்
எழுந்த ஒலியை ரசித்தனள்.
சின்னப் பெண்ணாய் சிரித்தது
சிலிர்த்து எண்ணெய் பொரிந்தது.

உழுத்தம் மாவை எடுத்தனள்
உருட்டி உருட்டிப் பிசைந்தனள்
அழுத்தி அழுத்தித் தட்டினள்
அதற்குள் எதையோ திணித்தனள்

கொதிக்கும் நெய்யில் இட்டனள்
கிளறித் தட்டால் விட்டனள்.
குதித்துப் புரண்டு வந்தது
குண்டாய் உழுத்தம் பணியாரம்.



UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெயிலும் மழையும்

வரண்டு பயிர்கள் வாடின
வரட்சி எங்கும் சாடின
புரண்டு விலங்கும் சோர்ந்தன
புவியில் வறுமை ஊர்ந்தன.

கடலும் பொங்கி ஆர்த்தது
காற்றும் மூசி விரைந்தது.
சுடராய்ச் சிவந்த சூரியன்
சீறி வானில் தோன்றினன்



உயிர்கள் துயரைக் கண்டனன்
உறுமிக் கடலை வறுத்தனன்
உயர்ந்து கடல்நீர் ஆவியாய்
ஊர்ந்து வானில் பரந்தது



மழையும் அடித்துச் சொரிந்தது
மரமும் செடியும் மகிழ்ந்தது
பிழைத்து உயிர்கள் ஆடின
போற்றிப் புகழ்ந்து வாழ்த்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி



மலை நிறைந்த வெளியிலே
மனிதன் கூவி ஒலித்தனன்
மலையில் மோதி ஒலியலை
வந்து காதில் ஒலித்தது.

மீண்டு கிணற்றுள் கூவினன்
மகிழ்ந்து துள்ளிக் குதித்தனன்
தூண்டும் அறிவு துளிர்த்தது
செயலாய் வடிவம் பெற்றது.

ஒலியின் அலையை அறிந்தனன்
ஒலியைப் பதிவும் செய்தனன்
ஒலியைக் காற்றில் பரப்பினான்
ஒலிக்கப் பெட்டி ஆக்கினான்.



வான் பரப்பில் ஒலியலை
வந்து வட்டம் அடிப்பதை
வானொ லியில் கேட்கிறோம்
விந்தை கண்டு மகிழ்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயன்று பார்

நீல வானம் விரிந்து கிடக்குது
நீந்தி மேகம் கோலம் காட்டுது
கோலச் சிறகை பறவை விரிக்குது
கூடி மகிழ்ந்து பறந்து காட்டுது.

மரஞ் செடிகள் வளரத் துடிக்குது
மலரும் காயும் விளைந்து சொரிக்குது
பரந்து விலங்கு பாய்ந்து திரியுது
பாரில் உயிர்கள் மகிழ்ந்து வாழுது.

பறவை போல பறக்க ஆசையா
பாடி நீரில் நீந்த ஆசையா
சிறகு செய்து பொருத்திப் பார்த்திடு
சிகரம் வரை சென்று பார்த்திடு.

நினைப்பதை நீ செய்து முடிக்கலாம்
நிறைந்த உழைப்பால் உயர்ந்து காட்டலாம்
அனைத்தும் உன்னால் ஆக வேண்டுமே
அதற்கு முயன்று கல்வி கற்றிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோரை மதிப்போம்

இடறி இடறி முதியவர்
எழுந்து விழுந்து நடந்தனர்
கிடந்த கல்லில் இடறியே
கிழவர் சரிந்து விழுந்தனர்.

தாகம் பசி இரண்டுமே
தாக்க வாடிச் சோர்ந்தனர்
சோகம் கொண்ட சிறுவர்கள்
தூக்கி அவரை ஏந்தினர்.

தப்பி நீரால் கழுவினர்
துடைத்து நிமிர்த்தி எழுப்பினர்
அப்பா தாங்கித் தூக்கினார்
அம்மா உணவை ஊட்டினார்

களைப்புத் தீர்ந்த முதியவர்
கண்ணால் நன்றி கூறினர்.
உழைத்துக் களைத்த முதியரை
உவந்து போற்றி வாழ்வோம்.



UNIVERSITY ... LIBRARY 13 OCT 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்ன வண்ணச் சிலந்தியார்



சின்ன வண்ணச் சிலந்தியார்
சறுக்கும் குழாயுள் ஏறினர்
உன்னிப் பெய்த மழையினால்
உதைக்க வந்து விழுந்தனர்.

சேறும் நீரும் சேர்ந்ததால்
சிக்கி அவதிப் பட்டனர்.
கூற வார்த்தை இன்றியே
கூடிச் சிறுவர் வாடினர்.

வெப்பக் கதிரோன் வந்தது
வற்றி மழைநீர் போனது
தப்பி எழுந்த சிலந்தியார்
தாவி மீண்டும் ஏறினார்.

கண்ட சிறுவர் ஆடினர்
களித்துப் புரண்டு பாடினர்
நன்றி இறைக்குக் கூறினர்
நலமே வாழ்த்திப் பாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைத்துளி

சின்னச் சின்னத் தூறலாய்
சிந்தும் வான மழைக் கொடி
பின்னி ஒன்றாய்ச் சேர்ந்துமே
மண்ணில் ஊர்ந்து போகுது

பள்ளம் பார்த்துப் பதுங்குது
பாய்ந்து குளமாய் ஆகுது
வெள்ளம் சேர்ந்து கொண்டது
மிதந்து கப்பல் ஆடுது

காற்றும் குளிரும் சேர்ந்தது
கலந்து நிலத்தைத் தடவுது
சேற்று நிலத்தில் தாமரை
தலையை நீட்டிக் காட்டுது

நிலமும் குளிர்ந்து கொண்டது
நீரை உறிஞ்சி மகிழ்ந்தது
வளத்தைப் பெருக்கித் தருகுது
மனிதர் வாழ்வும் பெருகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண நிலவு



வண்ண நிலவைப் பாரடா
வந்து வானில் நீந்துது.
கண்ணில் ஒளியை ஏற்றுது
களித்து மனமும் போற்றுது.



கூனற் பிறையாய் தெரியுது
கூடி நாளும் வளருது
வானம் பூத்து மகிழுது
வனப்பும் பெற்று நெளியுது.



விண்ணை அளந்து நிலவிலே
வீடு கட்ட விரைந்திடு
மண்ணின் வீரன் நீயென
மகிழப் பயணம் செய்திடு.

ஆம்ஸ்ரோங் வைத்த காலடி
அடுத்து வைப்ப தாரடி ?
நாம்தான் என்று செயற்படு
நம்பிக் கல்வி கற்றிடு .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயம் பார்



உப்புக் கடல் காற்று வந்து
ஊதும் காதிலே
கப்பல் ஆடிக் குதித்து நீந்தும்
கடலின் அலையிலே

இரும்புத் துண்டைக் கடலுள் போட
இறங்கித் தாழுது
துரும்பு ஒன்றைத் தூக்கிப் போட
துள்ளி மிதக்குது.

உப்பைக் கொஞ்சம் நீரில் போட்டால்
உடனே கரையுது
தப்பிக் கல்லை எறிந்து விட்டால்
தாழ்ந்து போகுது.

பாரம் உள்ள பொருள்கள் யாவும்
பதுங்கும் நீரினுள்
பாரம் இல்லா எந்தப் பொருளும்
பாடி மிதக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணம்

சக்குப் புக்குச் சத்தம் போட்டு
சின்னக் கோச்சி போகுது
திக்கு முக்குத் தாளம் போட்டு
மாட்டு வண்டி ஓடுது



கரிய தாரின் வீதி மேலே
காரும் வஸ்சும் ஊருது
விரியும் நீலக் கடலின் மீதே
விரைந்து கப்பல் நீந்துது

நீல வானில் காற்றைக் கிழித்து
நீந்தி ஊர்தி பறக்குது
காளை மாடு இழுக்க வண்டி
குன்று குழியில் செல்லுது



கால் நடையில் சென்ற மனிதன்
கண்டு கொண்ட கல்வியால்
கால வெள்ளம் தன்னைக் கடந்து
காத தூரம் செல்கிறான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிப் பழகு



ஓடிப் பழகி ஆடு - உடல்
உறுதி கொள்ளும் பாடு
கூடிச் சேர்ந்து வாழு - எந்தக்
குறையும் இல்லைக் கேளு.

ஓடு பாதை இருக்கும் - அங்கு
ஒதுக்கி இடமும் கிடக்கும்
பாடு பார்த்துப் பழகி - நீ
பதமாய் ஓட வேண்டும்.



இடது காலை ஊன்று - பின்
இருகை முன்னால் ஊன்று
பிடரி சிலிர்க்க ஓடு - உன்
பின்னால் வெற்றி ஆடும்.

கல்வி வாழ்க்கை ஆகும் -அதைக்
கற்றல் படினம் ஆகும்
உள்ளம் விரும்பிச் செய்தல் - அதில்
ஊறித் திளைத்தல் கல்வி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலும் பயனும்

உலகம் கோள வடிவமாம்
உள்ள கடலும் பெரியதாம்
தளம்பிக் கடல்நீர் நிலத்தையும்
தட்டித் தட்டிச் சிதைக்குதாம்.

காற்று வந்து மோதுது
கடலும் துள்ளிப் பாயுது
சீற்றம் கொண்டு கடலலை
சினந்து கரையை வாருது.

கடலில் பயணம் செய்யலாம்
கட்டுத் தோணி செலுத்தலாம்
கடலில் மீனும் பிடிக்கலாம்
கறிக்கு உப்பும் எடுக்கலாம்.

நீச்சல் அடித்துப் பழகலாம்
நீந்திக் கரையில் குதிக்கலாம்
கூச்சல் போட்டு ஆடலாம்
கூடி ஆடிப் பாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானும் மரமும்.




புயலாய் காற்று வீசும்
புழுதி வானில் பூசும்
உயர்ந்த மரங்கள் துடைப்பம்
எடுத்து வானைத் துடைக்கும்.

உயர்ந்து மரங்கள் முழிக்கும்
உரசும் கிளையை விரிக்கும்
அயர்ந்த முகிலைத் தடுக்கும்
அணைத்துத் துளியாய் முடுக்கும்

மழையும் வாரி இறைக்கும்
மரமும் கிளையை அசைக்கும்
கலைந்து மேகம் வெளுக்கும்
கனிந்து வானம் களிக்கும்.

வானம் சுத்தம் கொள்ளும்
மரமும் மகிழ்வு கொள்ளும்
வானம் சுத்தம் கண்டால்
மற்று உயிர்கள் வாழும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளி செல்வோம்





காலையில் பள்ளி செல்வோம்
கடவுளை வணங்கித் துதிப்போம்.
சாலநல் பாடல்கள் இசைப்போம்
தாளங்கள் போட்டுமே நடிப்போம்.

கதைகளைச் சொல்லி மகிழ்வோம்
கற்பனை உருவங்கள் செய்வோம்.
உதவிசெய் மனிதராய் வாழ்வோம்
உலகதில் மகிழ்ச்சியைக் காண்போம்.

எண்ணும் எழுத்தையும் கற்போம்
எழிலுறு சித்திரம் வரைவோம்.
கண்ணென குருவை மதிப்போம்
காற்றென வீட்டுக்கு விரைவோம்.

பெரியோர் சொல்வதைக் கேட்போம்
புரிந்தவர் சொற்படி நடப்போம்.
அரியவை செய்துமே உயர்வோம்
அன்பே உயர்வென இசைப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாயும் சேயும்.

உயர்ந்த மரம் கிளை பரப்பி
ஓங்கி வளர்ந்து நின்றன.
மயங்கும் மாலைப் பொழுதினிலே
மந்தி பாய்ந்து வந்தன.

நீண்ட வாலை நிமிர்த்தி வளைத்து
நிலத்தில் நடந்து திரிந்தன.
வாண்டுக் குட்டி தாவிப் பாய்ந்து
வயிற்றில் பற்றித் தொங்கின.



மரத்துக் கிளை ஊஞ்சல் ஆட்ட
மகிழ்ந்து ஆடி மயங்கின.
குறு குறுத்த குட்டி சேர்ந்து
குதித்துத் துள்ளிப் பாய்ந்தன.

ஆணும் பெண்ணும் சேர்ந்து சேயை
அணைத்துக் கொண்டு கொஞ்சின.
பேனும் பார்த்துப் பிடித்துக் கடித்து
பாய்ந்து மகிழ்ந்து கெஞ்சின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோடிக் காளைகள்.

இரண்டு காளை மாடுகள்
இழுக்க வண்டி உருளுது.
புரண்டு எழும்பும் புழுதியும்
புயல் பரப்பிப் பெருகுது.

வண்டிச் சில்லு கடகடக்க
மாட்டு வண்டி வருகுது
சுண்டு வில்லின் அம்புபோல
துள்ளி விரைந்து வருகுது.



காளை வாயில் நுரையெழும்ப
காற்றாய்ப் பறந்து வருகுது.
வாலைக் கிளப்பி வாளிப்பாய்ந்து
வடிவாய் வண்டி இழுக்குது.

சோடி மாடு சேரும்போது
சோக்காய் வண்டி போகுது.
கூடி மனிதர் வாழும்போது
கோடி நன்மை விளையுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதைப்பதேனோ?





குருவி இனம் வேண்டும்போது
கூடு கட்டி வாழுது.
குரங்கு விலங்கும் தேவைகண்டு
குகை நிழலைத் தேடுது.

பசி எடுத்த போதுமட்டும்
பறவை தேடி உண்ணுது
பசி வயிற்றைக் கிள்ளும்போது
பரந்து விலங்கு தின்னுது.

குருவி கூடு கட்டுதற்குக்
கூலி கொடுத்த துண்டா?
குரங்கு விலங்கு ஒதுங்குதற்கு
குகை மறுத்த துண்டா?



மனிதன் மட்டும் விதிவிலக்காய்
மண்ணில் இருப்ப தேனோ?
மனிதன் வாழ மனிதனுயிரை
வாட்டி வதைப் பதேனோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் படைப்பு.

கள்ளிச் செடிக்குக் கடவுள் ஏனோ
முள்ளைக் கொடுத்தான்.
கொள்ளை அழகு ரோசாச் செடிக்கும்
கொழுக்கி கொடுத்தான்.



பாயும் புலி சிங்கத்துக் கேன்
நகத்தைக் கொடுத்தான்.
மேயும் பசு விலங்குக்கு மேன்
கொம்பைக் கொடுத்தான்

தன்னைத் தானே காத்துக் கொள்ளும்
சக்தியும் கொடுத்தான்
உன்னை நீயே காப்பாய் என்றே
இறைவன் படைத்தான்



வல்ல இறைவன் மனிதனுக் கேன்
வல்லமை கொடுத்தான்.
எல்லாத் திறனும் பெற்ற மனிதன்
ஏய்த்து வாழ்வதேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர்ந்து ஆடுவோம்

சிறுவர் கூடி வந்தனர்
சில்லுக் கோடு ஆடினர்
குறுக்கும் மறுக்கும் பாய்ந்தனர்
குழம்பிக் குறும்பில் ஆழ்ந்தனர்.

ஆட்டம் பிழை என்றனர்
அதட்டிக் கதைத்துக் கெம்பினர்
கூட்டம் இரண்டாய்ப் போனது
கூடிச் சண்டை ஆனது.





அரவம் கேட்ட அதிபரும்
அங்கு வந்து சேர்ந்தனர்.
சிரித்து வாழப் பழகணும்
சினத்தை அடக்கி வாழணும்

கூடி ஒன்றாய் ஆடுங்கள்
கோபம் வேண்டாம் என்றனர்
ஓடிச் சிறுவர் கூடினார்
ஒன்றாய்ச் சேர்ந்து ஆடினார்.~



UNIVERSITY OF ...
13 OCT 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழ்மை போக்குவோம்



அழுது கொண்டு சிறுவர்கள்
ஆடி அசைந்து வந்தனர்
பொழுது போன பின்னரும்
புலம்பிக் கதறி நடந்தனர்

கந்தல் சட்டை உடம்பிலே
கவலை தூங்கும் முகத்திலே
இந்த வயதில் ஏழையாய்
இருப்ப தெங்கள் பாவமே

எண்ணிச் சொல்லி வெந்தனர்
எரியும் வயிற்றைப் பிசைந்தனர்
அண்ணன் அப்பா பார்த்தனர்
அன்பாய் அழைத்து வந்தனர்

உடுக்க உடையும் கொடுத்தனர்
உண்ண உணவும் கொடுத்தனர்
படுக்க இடமும் ஒதுக்கினர்
படிக்க வழியும் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊசி மிதக்கும்



தண்ணீர் வாளியில் எடுத்துக்கொள்
தாள்துண்டு ஒன்றும் தேடிக்கொள்
குண்டுசி ஒன்றையும் பெற்றுக்கொள்
கூர்ந்து கவனமாய்க் கேட்டுக்கொள்.

தாள்துண்டை நீரில் போட்டுக்கொள்
சரியாய் மிதக்குதா பார்த்துக்கொள்
தாளில் ஊசியை வைத்துப்பார்
சங்கதி இனித்தான் உற்றுப்பார்



மெதுவாய் மெதுவாய் தாள்நீரில்
மெல்ல ஊறி உப்பி விடும்
அதுவாய் நீரில் அமிழ்ந்து விடும்
அப்புறம் ஊசியின் நிலையைப் பார்

என்ன நடந்தது பார்த்தாயா
இந்திர வித்தையைக் கேட்டாயா
சொன்ன படிக்கு நீரின்மேல்
சின்ன ஊசி மிதக்குதுபார்.





UNIVERSITY ... 13 OCT 2006 ... LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளான் குடை

இருண்டு வானம் மழை பொழியும்
ஈரம் கொண்டு மண் குளிரும்
புரண்டு நீரும் குளம் நிறையும்
புதுமலர் பூத்து மரம் சொரியும்.

மெல்ல மெல்ல நிலம் வெடிக்கும்
மெதுவாய் எழுந்து முளைகள் வரும்
உள்ளம் மகிழ்ந்து துள்ளி எழும்
உலக அதிசயம் வியக்க வைக்கும்.



கம்பி இல்லாக் குடை விரியும்
காணும் இடங்களில் அவை தெரியும்
தம்பி கையில் அது மிளிரும்
தண்டு பஞ்சாய் மெது மெதுக்கும்.



மாரி வந்தால் தான் புரியும்
மண்ணில் பற்பல குடை விரியும்
ஊரில் உள்ள யாவருக்கும்
உணவாய் காளான் உதவி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடி ஆடுவோம்

பாலர் நாங்கள் கூடுவோம்
பாட்டுப் பாடி ஆடுவோம்
தோழர் கூடி ஓடுவோம்
சேர்ந்து ஆடிப் பாடுவோம்.

சின்னச் சின்ன கைகளை
சேர்த்து ஒன்றாய் பிடித்துமே
பின்னிக் கொண்டு பூக்களாய்
பாட்டுப் பாடி ஆடுவோம்.

அன்பு கொண்டு வாழுவோம்
அறிவைத் தேடிக் கொள்ளுவோம்
இன்பம் ஒன்றாய் வாழ்ந்திடில்
இந்த உலகம் சொர்க்கமே.

கடவுள் தந்த தோட்டத்தில்
கன்னிப் பூக்கள் நாங்களே
மடமை நீக்கி வாழுவோம்
மனதால் உயர்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழன்று ஆடுங்கள்

தம்பி தங்கை வாருங்கள்
தாளம் தட்டி ஆடுங்கள்
தும்பி போன்று வட்டமாய்
சுற்றி வந்து பாடுங்கள்

இடுப்பில் கையைச் சேருங்கள்
இணைந்து நெருங்கிக் கூடுங்கள்
பிடித்த கையைக் கோருங்கள்
பாசம் கொண்டு பாருங்கள்

முகத்தில் மகிழ்ச்சி காட்டுங்கள்
முகம் மலர்ந்து பாடுங்கள்
சுகம் உடலில் சேர்ந்திடும்
சுழன்று சுழன்று ஆடுங்கள்

அன்பை மனதில் ஏற்றுங்கள்
அறிவை உள்ளத்தில் தேக்குங்கள்
இன்பம் இன்பம் பாடுங்கள்
இனிமை கூடும் ஆடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல் கேளுங்கள்

பள்ளி செல்லும் பாலர்களே
பாரதி பாடலைக் கேளுங்கள்
வெள்ளை றோஜாச் செல்வங்களே
வள்ளுவன் குறளைப் பாடுங்கள்

காலையில் கல்வி கல்லுங்கள்
கல்மேல் எழுத்தாய் ஆகிவிடும்
மாலையில் ஆடி மகிழுங்கள்
மனதும் உடலும் வலிமையுறும்

கற்பதை மனதில் கொள்ளுங்கள்
களவு பொய்யைத் தள்ளுங்கள்
சொற்படி நடந்து காட்டுங்கள்
சொர்க்கம் உண்டு ஆடுங்கள்

அறிவால் உயர்ந்து நில்லுங்கள்
அன்பால் இணைந்து வெல்லுங்கள்
உறவு உயிர்மேல் வையுங்கள்
உலகம் மகிழும் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடு தம்பி

பாட்டுப் பாடு தம்பி
பார் புகழப் பாடு
கேட்டு உன்னை உலகம்
தூக்கிக் கொண்டு ஆடும்

நல்லோர் சொல்லே மந்திரம்
நலமே என்றும் தந்திடும்
சொல்லில் இன்பம் சேருங்கள்
சொர்க்கம் கூடும் பாடுங்கள்

அஞ்சா நெஞ்சம் வேண்டும்
அறிவால் உயர்தல் வேண்டும்
கெஞ்சி வாழ்தல் வேண்டாம்
கெடுதி செய்தல் வேண்டாம்

அன்பே உலகில் தெய்வம்
அனைத்து உயிரும் தெய்வம்
உன்னை உணர்ந்து கொள்ளு
உலகே சொந்தம் பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் நிலாவைப் பார்

பால் நிலாவைப் பாரடா
பந்து போன்று வானத்தில்
சூழ்ந்து வெள்ளிக் கூட்டங்கள்
சுடர் பரப்பி மின்னுது

வட்ட நிலா வந்துமே
வான் முகட்டில் நிற்குது
தொட்டுக் கையால் பார்க்கவே
துள்ளி மனதும் துடிக்குது

வீட்டு முற்றப் பாயதில்
வைத்து அம்மா உணவையும்
ஊட்டிக் கதைகள் சொல்லுவார்
உணர்வை ஊட்டிச் செல்லுவார்

குளிர்ந்த ஒளியில் மரஞ்செடி
குளித்து மயங்கி ஆடுது
பளிங்குச் சிலைகள் போலவே
பலதும் அழகு சூடுது.

UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் ஆடுவோம்

உயர்ந்த மரத்துக் கிளையிலே
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
நயம் நிறைந்த பாடலை
நாளும் போற்றிப் பாடுவோம்

அண்ணன் ஊஞ்சல் பலகையில்
ஆட நுனியில் நிற்கிறான்
கண்ணன் பலகை நுனியிலே
கயிற்றைப் பிடித்து நிற்கிறான்

தம்பி தங்கை ஊஞ்சலில்
தாளம் போட்டுப் பாடுறார்
உந்தி உந்தி அண்ணன்மார்
ஊஞ்சல் ஆட வைக்கிறார்

சிறுவர் நாங்கள் செய்வதை
சுற்றம் சூழ்ந்து பார்க்கிறார்
பெருமை கொண்டு பெரியவர்
பார்த்துக் களித்து நிற்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவும் தம்பியும்

மண் வெட்டியை எடுத்தனர்
வட்டப் பாத்தி வெட்டினர்
கொண்டு வந்த செடிகளை
குழியில் அப்பா வைத்தனர்

வட்ட வட்டப் பாத்தியில்
வளரும் மரஞ் செடிகளை
தொட்டுத் தொட்டுப் பார்த்துமே
தண்ணீர் தம்பி ஊற்றினன்

பச்சை இலைச் செடிகளில்
பல நிறத்தில் பூக்களும்
உச்சிக் கிளையில் காய்களும்
உருண்டு திரண்டு தொங்கின.

பச்சைக் காய்கள் மஞ்சளாய்
பழுத்துத் தொங்கிக் குலுங்கின
"அச்சா" பழங்கள் சாப்பிட
ஆய்ந்து அப்பா தந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவும் நானும்

குருவி பாடத் தொடங்குது
கோழி கூடக் கூவுது
இருளும் மெல்ல விலகுது
என்னை அம்மா பார்க்கிறார்

அப்பா குளித்து வருகிறார்
ஆய்ந்து பூக்கள் எடுக்கிறார்
எப்ப வந்து எழுப்புவார்
என்று மூடிப் படுக்கிறேன்

வந்து பக்கம் இருக்கிறார்
வருடி அன்பாய் தொடுகிறார்
தந்தை பாசப் பிணைப்பினால்
தருணம் பார்த்து எழுகிறேன்

துலக்கிப் பல்லைக் குளித்துமே
தந்தை பக்கம் வந்துமே
வழக்கம் போல இறைவனை
பாடித் தொழுது காட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைப் பருக வேண்டும்

அம்மா எழுந்து வந்தனள்
அடுப்பை ஏற்றி வைத்தனள்
செம்பைக் கையில் எடுத்தனள்
சென்று பாலைக் கறந்தனள்

பாலைக் காய்ச்சித் தந்தனள்
பருகச் சொல்லி இருந்தனள்
வாலைக் கிளப்பிக் கன்றுமே
வந்து துள்ளிப் பாய்ந்தது

அன்பாய் தாயும் அழைத்தது
அமுதப் பாலைக் கொடுத்தது
கன்று குடிக்கும் போதிலே
கனிந்து அணைத்துக் கொண்டது

பாலைப் பருக வேண்டுமாம்
பலனும் வந்து சேருமாம்
காலை மாலை இருமுறை
கன்னல் பாலைப் பருகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா பள்ளி போகிறாள்

அக்கா குளித்து வருகிறாள்
அழகாய் சட்டை அணிகிறாள்
சிக்கைச் சீப்பால் நீக்கிறாள்
சீவிச் சடையைப் பின்னுறாள்

பேனா பென்சில் எடுக்கிறாள்
பையில் போட்டு அடைகிறாள்
தானாய் பொட்டு வைக்கிறாள்
தலையை அசைத்துக் கொள்கிறாள்

உணவுத் தட்டை எடுக்கிறாள்
உண்டு நீரைக் குடிக்கிறாள்
சுணங்கிப் போச்சு என்கிறாள்
சொல்லிக் கொண்டு நடக்கிறாள்

புத்தகப் பை முதுகிலே
புதிய உலகம் கண்ணிலே
புத்தம் புது பாவைபோல்
பள்ளிக் கூடம் போகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுது மயில்

வண்ணப் பூக்கள் முற்றத்திலே
பூத்துக் குலுங்குது
வண்டு வந்து சுற்றியதை
வட்டம் அடிக்குது

சல சலத்து ஓடையிலே
தண்ணீர் ஓடுது
கல கலத்து காற்றசைந்து
குளிர்மை தேடுது

வீசும் காற்றின் பூஞ்செடிகள்
மிதந்து ஆடுது
மூசும் வண்டு ஊதியிசை
வீணை மீட்குது

பறவை இனம் பறந்து பாடி
பாடல் இசைக்குது
குரல் குயிலின் இனிமையிலே
மயிலும் ஆடுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் துள்ளுது

கன்று துள்ளி ஓடுது
காற்றில் மரமும் அசையுது
நின்று மயிலும் ஆடுது
நீலக் குயிலும் பாடுது

வண்டு பறந்து திரியுது
வண்ணப் பூக்கள் விரியுது
கண்டு தும்பி ஊதுது
காதில் பாய்ந்து இனிக்குது

பறவை பாடிப் பார்க்குது
பறந்து குஞ்சைத் தேடுது
சிறகை விரித்துக் காட்டுது
சின்னக் குஞ்சும் சிலிர்க்குது

வானில் வில்லும் தெரியுது
வண்ண நிறங்கள் நெளியுது
காணு ம் மனதும் துள்ளுது
கடவுள் செயலை உள்ளுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்கள்

தாமரை குளத்தில் தலையவிழும்
தாழும் பூவோ மணம் கமழும்
சாமரை வீசும் மயிற் கொன்றை
சண்பகம் முல்லை முகம் பார்க்கும்

சூரிய காந்தி கண் விழிக்கும்
சூடி இதழ்கள் கண் பறிக்கும்
நேரிய மல்லிகை மலர்ந்தாடும்
நீரில் பூக்கள் அசைந்தாடும்

வண்ணம் சூடும் ரோஜாப்பூ
வடிவாய் மலரும் அல்லிப்பூ
தன்மை சேர்க்கும் காடெல்லாம்
தள்ளும் பூக்கள் தேன்சொரியும்

அத்திப் பூவோ மருந்தாகும்
அகத்திப் பூவோ குழம்பாகும்
நித்திய மருந்தாம் வேப்பம்பூ
நிமிர்ந்து ஆடும் அலரிப்பூ



UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வீடு

கம்பு தடி கிடுகு மட்டை
கொண்டு வந்தான் அண்ணா
தும்பு சணல் கயிறு வகை
தம்பி எடுத்து வந்தான்

கொப்பு வெட்டி கொடியும் கட்டி
குடி மனையும் செய்து
கப்பு நட்டுக் கூரை யிட்டு
கிடுகு கொண்டு வேய்ந்தோம்

படுக்கை அறை மண்டபமும்
பெரிய சமையல் கட்டும்
எடுப்பான கதவு யன்னல்
எங்கள் வீட்டில் வைத்தோம்

களி மண்ணால் சுவர் வைத்து
சாணம் கொண்டு மெழுகி
அழகான வீடு ஒன்றை
இனிது கட்டி முடித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோச்சி வருது

கோச்சி வருது கோச்சி வருது
கொஞ்சம் விலகி நில்லுங்கள்
ஆச்சி போகும் கோச்சி வருது
ஐயா விலகிக் கொள்ளுங்கள்

தண்ட வாளக் கோட்டின் மேலே
சட சடத்து வருகுது
கண்ட மனம் துள்ளியாட
காற்றாய் கோச்சி வருகுது

சக்குப் புக்கு சக்குப் புக்கு
சத்தம் போட்டு வருகுது
அக்கா அண்ணா பாட்டன் பாட்டி
ஆடிப் பாட வருகுது

சிவப்பு வெளிச்சம் கண்ட போது
சீறிக் கொண்டு நிற்குது
கவரும் பச்சை வெளிச்சம் கண்டு
வீசில் அடித்துப் போகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவலும் காவலும்

காவல் தலைவன் போலவே
கழுத்தை பக்கம் அசைத்துமே
சேவல் வந்து கூவுது
தேடிக் கோழி போகுது

மண்ணைக் காலால் கிளறுது
மண்ணும் கிளர்ந்து சிதறுது
உண்ணும் பொருளைத் தேடுது
ஊரும் புழுவைக் காணுது

கொத்திக் கொத்திக் கொடுக்குது
கோழி அதனை உண்ணுது
தத்தி வந்த காகமும்
தூர நின்று பார்க்குது

பக்கம் நாயும் வந்தது
பதுங்கிப் பூனை சென்றது
கொக்கொக் என்று சேவலும்
காவல் செய்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பியும் சைக்கிளும்

மெல்லக் கண்ணை விழிக்கிறான்
விடிந்த பின்னும் படுக்கிறான்
பள்ளி இன்று இல்லையாம்
படுத்துக் கிடக்க நினைக்கிறான்

அப்பா எழுந்து வருகிறார்
அடித்து மணியை ஒலிக்கிறார்
இப்போ வந்தால் பழகலாம்
இந்தா சைக்கிள் என்றனர்

துள்ளித் தம்பி எழுகிறான்
சுருட்டிப் பாயை வைக்கிறான்
தள்ளிச் சைக்கிள் உருட்டுறான்
தத்தித் தாவிப் பாய்கிறான்

முன்னால் தம்பி பார்ப்பதும்
மூசிப் "பெடலை" மிதிப்பதும்
பின்னால் அப்பா பிடிப்பதும்
பார்க்க இன்ப வேடிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிள் ஓடுவான்

சைக்கிள் ஓடுவான் - தம்பி
சைக்கிள் ஓடுவான்
தைக்கும் வெயிலிலும் - அவன்
சைக்கிள் ஓடுவான்

சின்னக் கைகளால் - சைக்கிள்
"காண்டில்" பிடிப்பான்
உன்னிக் கால்களால் - அதன்
"பெடலை" மிதிப்பான்

தாவி ஏறுவான் - தம்பி
சறுக்கி விழுவான்
கூவி அப்பாவை - துணை
கூட்டி ஓடுவான்

மணியை அடிப்பான் - அழுத்தி
"பிறேக்கை" பிடிப்பான்
தனியாய் வீதியில் - இப்போ
தானாய் ஓடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் செயலும்

காகம் ஒன்று வந்தது
தாகம் என்று திரிந்தது
சோகம் கொண்டு அலைந்தது
சுற்றிச் சுற்றிப் பறந்தது.

வீட்டுத் தோட்ட முற்றத்தில்
குடம் இருக்கக் கண்டது
நாட்டம் கொண்டு வந்தது
நாடிக் குடத்தில் இருந்தது.

குடத்துள் நீரைக் கண்டது
குடிக்க முடியாதிருந்தது
திடமாய் விரைந்து எழுந்தது
குடமும் விசையில் சரிந்தது.

தாகம் தீரக் குடித்தது
இராகம் பாடிப் பறந்தது
காகம் செய்த செயலினை
தம்பி நீயும் உணர்ந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் நரியும்

ஆச்சி இறைச்சி வாங்கினள்
அரிந்து துண்டாய் வைத்தனள்
வீச்சாய் காகம் வந்தது
விரைந்து இரண்டை எடுத்தது.

பறந்து கொண்டு சென்றது
பெரிய மரத்தைச் சேர்ந்தது
செறிந்த கிளையில் வைத்துமே
கொத்திக் கொத்தித் தின்றது.

கொத்தித் தின்னும் போதிலே
கீழே நரியைக் கண்டது
மெத்தப் பசியில் வாடியே
மெலிந்து நரியும் பார்த்தது.

இந்தா என்று சொல்லியே
இறைச்சித் துண்டைப் போட்டது
நொந்த நரியும் உண்பதை
காகம் பார்த்து மகிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் பருந்தும்

பருந்து உயரப் பறந்தது
பார்வை நிலத்தில் பதிந்தது
இருந்து எதையோ கண்டது
இடுக்கிக் கொண்டு விரைந்தது.

கோழி பதறித் தவித்தது
குஞ்சு அலறித் துடித்தது
கீழே இருந்த சேவலும்
சீறிப் பாய்ந்து சோர்ந்தது.

சோகம் கொண்ட தாயையும்
தவிக்கும் கோழிக் குஞ்சையும்
காகம் பார்த்துப் பறந்தது
பருந்தைச் சாடி வென்றது.

பொறுக்க முடியாப் பருந்துமே
போட்டுக் குஞ்சைப் போனது
சிறகால் குஞ்சைக் கோழியும்
சேர்க்கக் காகம் மகிழ்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் நாயும்

கட்டுச் சோற்றுப் பெட்டியை
கடியன் நாயும் கண்டது
கிட்ட வந்த நாய்களை
கடித்து விரட்டி நின்றது.

பசியில் துடித்த நாய்களும்
பதுங்கி நின்ற பூனையும்
ருசித்துத் தின்னும் கடியனை
திட்டி மனதுள் வைதன.

காகக் கூட்டம் வந்தது
காட்சி இதனைக் கண்டது
வேகம் கொண்டு பாய்ந்தது
விரட்டி நாயும் நின்றது.

தருணம் பார்த்துக் காகமும்
தட்டிப் பொதியைச் சிதைத்தது
திரண்டு நின்ற பிராணிகள்
தின்று மகிழ்ந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் சூழலும்

விரைவாய் போன லொறியது
முட்டி எலியை அடித்தது
அரைந்து தேய்ந்த உடலது
அந்தத் தெருவில் கிடந்தது.

பாவம் பார்க்க ஆளில்லை
பக்கம் போட தோதில்லை
போவோர் வருவோர் பார்த்தனர்
பார்த்துப் பார்த்துப் போயினர்.

காகம் ஒன்று வந்தது
கண்ணால் எலியைக் கண்டது
காகா என்று சொன்னது
காகக் கூட்டம் சேர்ந்தது.

சத்தம் போட்டு நின்றது
தசையை எலும்பைத் தின்றது
சுத்தம் செய்து போனது
சூழல் தப்பிப் பிழைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் விருந்தும்

வீட்டு வேப்பை மரத்திலே
விடிய காகம் கரைந்தது
கூட்டும் அக்கா கூறினாள்
கூடி விருந்து வருகுதாம்.

அண்ணா கடிதம் வருகுதா
அப்பா செய்தி வருகுதா
கண்ணா காக்கை அண்ணாவே
கரைந்து காட்டு என்றனள்.

கரிய சிறகை விரித்துமே
காகம் கரைந்து நின்றது
புரிய வில்லை எனக்குமே
புதிராய் எல்லாம் இருந்தது.

மாலை நேரம் வந்தது
வண்டி வந்து நின்றது
காலை காகம் கரைந்தது
கண்டேன் அப்பா வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் கடமையும்

நல்ல பனி பெய்தது
நாலு மணி அடித்தது
மெல்லக் காகம் கரைந்தது
விடிந்து கொண்டு வந்தது.

சேவல் கூவிக் காட்டின
சேர்ந்து பறவை பாடின
கூவிக் குயிலும் பறந்தன
காகம் பிரிந்து சென்றன.

அலைந்து காகம் திரிந்தது
அங்கோர் உணவைக் கண்டது
குலைந்து பிரிந்த கூட்டத்தை
கூடி அழைத்துக் கொண்டது.

வந்த காகக் கூட்டமும்
வடிவாய் உணவை உண்டன
குந்தி இருந்த தந்தையும்
கூட்டு உறவை காட்டினார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் சோகமும்

அந்தி நேரம் ஆனது
அலைந்து காகம் பறந்தது
பந்தி உணவை முடித்தது
பாடிக் காகம் திரிந்தது .

கூட்டம் சேர்ந்து பறப்பதும்
கூடி இருந்து கதைப்பதும்
ஆட்டம் ஆடி நடப்பதும்
அழகுக் காகம் செய்தது .

மின்னைக் கடத்தும் கம்பியில்
மறந்து காகம் பட்டது
கண் இமைக்கும் பொழுதிலே
காகம் துடித்து வீழ்ந்தது .

கண்ட காகம் கூட்டமாய்
கதறிக் கரைந்து திரிந்தன
கொண்ட சோகத் துயரிலே
கூடி ஒன்றாய் அழுதன .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் தம்பியும்

அடம் பிடித்துத் தம்பியும்
அழுத வண்ணம் இருந்தனன்
உடன் உணவை ஊட்டவே
உபாயம் அம்மா தேடினள்.

காகம் தன்னை நினைத்துமே
காகா என்று கூவினள்
காகம் பறந்து வந்தது
கண்ட தம்பி துள்ளினான்.

சோற்றை அம்மா போட்டனள்
தத்திக் காகம் எடுத்தது
சோற்றை வாயில் ஊட்டினள்
தம்பி மகிழ்ந்து உண்டனன்.

UNIVERSITY OF ... 13 OCT 2006 LIBRARY

தம்பி பிடிக்கப் போவதும்
தள்ளிக் காகம் இருப்பதும்
அம்மா உணவைக் கொடுப்பதும்
அழகுக் காட்சி தானடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் குயிலும்

எங்கள் நாவல் மரத்திலே
இரண்டு காகம் வந்தன
தங்கக் கூடு கட்டின
தங்கி இரண்டும் வாழ்ந்தன .

காகம் இல்லா நேரத்தில்
குயிலும் முட்டை இட்டது
காக முட்டை இரண்டுடன்
கணக்கு நான்காய் ஆனது .

அடையும் காகம் காத்தது
அழகுக் குஞ்சும் பொரித்தது
சடையும் வளர்ந்து கொண்டது
சத்தம் கூடப் போட்டது.

குஞ்சு பெரிதாய் ஆனது
கூவி இரண்டு போனது
மிஞ்சி இருந்த இரண்டையும்
பார்த்து காகம் மகிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் விரதமும்

சனிக்கிழமை வந்தது
சமையல் அம்மா முடித்தனள்
இனிய விரதம் இன்றதாம்
இலையில் உணவு படைத்தனள் .

வெளியில் அம்மா வந்தனள்
வெறிக்க வெறிக்க பார்த்தனள்
சுழித்து முகத்தைத் தேய்த்தனள்
சுற்றி அயலில் வேர்த்தனள் .

உணவைக் கையில் எடுத்தனள்
உயரத் தள்ளி வைத்தனள்
கணத்தில் காகா என்றனள்
காகம் பறந்து வந்தன .

கொத்தி உணவை உண்டன
கொள்ளை இன்பம் கொண்டன
மெத்த மகிழ்ந்து அம்மாவும்
விரதம் நன்றே என்றனள் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் பசுவும்

பனை மரத்தின் நிழலிலே
படுத்துப் பசுவும் கிடந்தது
அணுகிக் காகம் வந்துமே
அமர்ந்து .பசுவில் இருந்தது.

பசுவின் காதில் காகமும்
பதமாய் ஏதோ சொன்னது
பசுவும் சுகமாய் அசைந்துமே
புரண்டு புரண்டு கிடந்தது.

வாலில் முதுகில் செவியுள்ளும்
வயிறு கழுத்து இமையிலும்
காலில் தொடையில் உடலிலும்
கண்டு உண்ணி எடுத்தது .

வயிறு நிரம்பிக் காகமும்
மரத்தில் ஏறிக் கரைந்தது
அயர்ந்து பசுவும் எழுந்துமே
ஆட்டி வாலைச் சென்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் உடலும்

குப்பை மேட்டில் காகங்கள்
குந்தி இருந்து இரைந்தன
தொப்பை வயிற்று மாமாவும்
தூக்கிக் குப்பை கொட்டினார்.

உயரப் பறந்து எழுந்தன
உடனே வந்து குந்தின
உயர்ந்த பசி போக்கலாம்
உள்ளம் களி கொள்ளலாம்.

இறைச்சி மீன் கழிவுகள்
எலும்பு குடல் மிகுதிகள்
நிறைய இருக்கும் என்றென
நினைத்துப் பியத்துக் கிளறின.

இறந்த காக உடல்களே
இருக்கக் கண்ட காகங்கள்
கரைந்து எழுந்து போயின
கண்ட நாயும் விலகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் பார்வையும்

வீட்டுத் திண்ணை முற்றத்தில்
வந்து காகம் இருந்தது
தோட்ட மரஞ் செடிகளில்
தேடி எதையோ பார்த்தது .

காகம் உற்றுப் பார்ப்பதைக்
காட்டி அப்பா வினவினார்
காகம் பார்க்கும் பார்வையின்
கதை தன்னைக் கூறினார் .

சீதை குளிக்கும் போதிலே
சயந்தன் பார்க்க எண்ணினான்
பேதை காகம் போலவே
போய் இருந்து பார்த்தனன் .

அறுகம் புல்லால் இராமனும்
அம்பு செய்து விட்டனன்
ஒருகண் பார்வை மட்டுமே
உண்டு என்று விளக்கினார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் பாம்பும்

கொண்டைக் கிளார் கூட்டிலே
குஞ்சு இரண்டு இருந்தன
கண்ட புடையன் பாம்பது
கௌவிக் கொண்டு சுருண்டது.

சுருண்டு கொண்டு குஞ்சையும்
சுவைத்து விழுங்கிக் கொண்டது
அருண்டு பயந்த குருவிகள்
அலறித் துடித்து அழுதன.

பார்த்து இருந்த காகமும்
பதறித் துடித்து எழுந்தன
வேர்த்துப் பறந்து கரைந்தன
வெளியில் செய்தி பரப்பின.

கண்டு கொண்ட இளைஞர்கள்
காற்றாய் பறந்து வந்தனர்
கொண்டு வந்த தடிகளால்
தாக்கிப் பாம்பைக் கொன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் தலைமையும்

கூடு காகம் கட்டிடும்
கூடி முட்டை இட்டிடும்
தேடி உணவை உண்டிடும்
தோட்டி போன்று உழைத்திடும்.

ஒன்று கூடி வாழ்ந்திடும்
உறவு கொண்டு கரைந்திடும்
நின்று வரும் செய்தியை
நமக்கு மெல்லச் சொல்லிடும்.

மக்கள் வாழும் சூழலின்
மாசு தன்னைப் போக்கிடும்
பக்கம் சூழ்ந்து எம்முடன்
பழகி என்றும் வாழ்ந்திடும்.

சனி பகவான் வாகனம்
தனக்கு காகம் ஆக்கினார்
சனி விரத நாட்களில்
தலைமை அதிதி காகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் காவிரியும்

வரட்சி கண்டு மரஞ்செடி
வாடி வதங்கிப் போயின
விரக்தி கொண்ட உழவர்கள்
பிள்ளையாரை வேண்டினர்.

பெரிய மரத்தின் நிழலிலே
பெருமை வாய்ந்த அகத்தியர்
அருந்தவத்தைச் செய்திட
அமர்ந்து நிமிர்ந்து இருந்தனர்.

நீரைக் கொண்டு கமண்டலம்
நிரம்பிப் பக்கம் இருந்தது
பாரைச் செழிக்கப் பிள்ளையார்
பார்த்த வண்ணம் இருந்தனர்.

தருணம் கண்ட பிள்ளையார்
காகம் போன்று பறந்தனர்
உருண்டு வீழ்ந்த கமண்டலம்
ஊற்றுக் காவிரி ஆனதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் அறிவும்

காகக் கூட்டம் சேர்ந்தது
கரைந்து கூச்சல் இட்டது
வேகம் கொண்டு கூச்சலும்
விண்ணை முட்ட எழுந்தது.

தலைவர் யாராம் என்பதில்
தர்க்கம் மூண்டு வளர்ந்தது
குலைந்து போகும் கூட்டத்தை
காகம் ஒன்று தடுத்தது.

அறிவு படைத்த மனிதனே
அடித்து வெட்டி அழிகிறான்
வெறி பிடித்த மனிதர் போல்
வெந்து நாமும் அழிவதா.

ஐந்து அறிவு படைத்த நாம்
அவர்க்கு புத்தி புகட்டுவோம்
அந்தச் காகம் சொன்னதும்
அனைத்தும் ஏற்றுக் கலைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
599082

UNIVERSITY OF PERADENIYA
13 OCT 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி...



ச. அருளானந்தம்

திரு. ச. அருளானந்தம் அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆலங்கேணி என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆலங்கேணிப் பாடசாலை, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பழைய மாணவர், பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர். ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக, கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்தவர். கடமையாற்றிய இடங்களிலெல்லாம் கல்விப் பயிர் செழிக்கப் பாடுபட்டவர். சிறப்பாக மலையகத்தில் கண்டி மாவட்டத்தில் உள்ள கலஹா என்ற இடத்தில் அவரது உழைப்பு அளப்பரியது. அவரது நினைவாக கல்லூரி மண்டபத்துக்கு 'அருள் மண்டபம்' என அவ்வூர் மக்கள் பெயர் சூட்டியுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் அறுபத்தைந்து பாடசாலைகளைத் திறந்து கல்விப் பணியாற்றினார். அங்கு அவராற்றிய இலக்கியப் பணி பாராட்டிற்குரியது.

சிறுவர் இலக்கியத்தில் அவரது பணி தனித்துவமானது. அவரது மூன்று சிறுவர் இலக்கிய நூல்கள் சாகித்திய மண்டலப் பரிசில்களைப் பெற்றுள்ளன. கலாபூசணம் விருதினைப் பெற்றுள்ள திரு. ச. அருளானந்தம் அவர்கள் இதுவரை மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். ஐந்து சிறுவர் நாவல்களை வெளியிட்டுள்ளார். 'பயங்கொள்ளலாகாது பாப்பா' சிறுவர் நாவல் அகில இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. சிறுவர்களுக்கான கதைகளை எழுதி வெளியிட்டுள்ளார். எட்டு சிறுவர் பாடல்கள் பொதிந்த நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றுள் 'காகமும் தம்பியும்,' மாநில சாகித்திய மண்டலப் பரிசினையும் 'மனதுக்கினிய பாட்டு' பெற்றுள்ளன. இவரது சிறுவர் பாடல் நூல்கள் தனித்துவமானவை. அருமையானவை. எந்த மெட்டிலும் பாடக்கூடியவை. சிறுவர் அறிவுக்கு எட்டுகின்ற எளிமையான கருக்களைக் கொண்டவை. தேர்ந்தெடுத்த சொற்கட்டமைப்புக்களைக் கொண்டவை. சின்னச் சின்ன சொற்கள், அந்தச் சொற்களின் துடிப்பு, துடிப்பிலே துள்ளி வரும் சத்தம். அந்தச் சந்தத்தின் இனிமையிலே துள்ளுகின்ற கருத்துக்கள், படிப்பினை ஆகியவற்றை இவரது பாடல்களில் காணலாம்.

இலங்கையிலுள்ள பிரபல பத்திரிகைகளில் ஆலன், கேணிப்பித்தன், குறுமுனி எனப் பல புனைப்பெயர்களில் கல்வி, இலக்கியம், விமர்சனம், எனக் கட்டுரைகளை எழுதி வருகிறார். வவுனியா நண்பர்கள் கலை இலக்கிய வட்டம் கவிஞரான அருளானந்தம் அவர்களைப் பாராட்டி 'சிறுவர் இலக்கியச் செல்வர்; என்ற கௌரவப் பட்டத்தை அளித்துப் பெருமை கொண்டது. அதே வேளை அன்னாரது சிறுவர் பாடல்களைக் கொண்ட சில நூல்களை ஒரு தொகுப்பாக ஒன்றாகப் பார்ப்பதில் பெருமையாக உள்ளது. அவரது சிறுவர் பாடல்கள் அனைத்தும் ஒரு தொகுதியாக, கனதியாக வெளிவரவேண்டும் என்பது என் போன்ற அபிமானிகளது வேண்டுகோளாகும். இதனை ... வர் இலக்கிய உலகம் பெருமை கொள்ளும்.

**க. தங்கராஜா**

கல்விப் பணிப்பாளர், திருக்கோணமலை.

599082

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org